முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1615

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.03.2024**, வெள்ளிக்கிழமை

1. சர்வ பலம் கொண்ட அரங்கனே
சற்குருவாய் மக்களுக்கு அருளுகின்ற
அற்புதம் நிறைந்த குருராஜனே ஆறுமுக அரங்கனே உந்தனுக்கு
அருளுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
2. இனிதே ஞான அறிவுரை ஆசி
இயம்பிடுவேன் சோபகிருது சால் திங்கள் தன்னில்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 18 ம் நாள், 01.03.2024, வெள்ளிக்கிழமை)
கனிவேலவன் என் மகா சூட்சுமமாய்
கருணையோடு கலியில் அவதரித்த
3. அவதரித்த ஆறுமுக அரங்கனே
அப்பனே உந்தனுள் யானிருந்து ஆக்கம் தந்து இந்த உலகை காத்துவர
வருகவே அரங்கன் உன் சபை
வையகத்தில் ஞான சபையாக
4. பெருமகான்கள் அனைவரும் வந்து கலந்து
பேருதவி புரிகின்ற வண்ணம் பலம் கூடி
பலம் கூடி மக்களை காத்துவர
பசிபிணி விரட்டும் மாதர்மசாலையாக
5. ஆகவே ஆற்றல்பெருகி உலகோர்க்கு அற்புதத்தை வழங்கி வருதலுற
ஆகவே உலகோர் அரங்கன உன்வழி அச்சமற தொடர்ந்து வந்து இணைந்து
வகைபட தர்மத்தில் கலந்து
வல்லமைபட அரங்கன் உன் உபதேசம் ஏற்று
6. ஏற்று ஞானம் பயின்றால்
எல்லோர்க்கும் ஞானசித்தி உறுதி உறுதி
உறுதி கொண்டு உன் சபைவழிதான்
உலகத்தையே மாற்றும் ஞானப்படையை

7. ஆறுமுகன் யான் உறுவாக்கி வருதல் காண
ஆகவே உலகோர் ஒன்றிணைந்து
அரங்கன் சபை இணைந்தால் போதும்
அகிலத்துக்கே மாற்றம் சடுதி காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–